46777

OL/2023(2024)/12/T-I,II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**12 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

ශෛවනෙරි I, II
சைவநெறி I, II
Saivanery I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## சைவநெறி I

**அறிவுறுத்தல்கள் :**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

**1.** "தம்பிதனக் காகவனத் தணைவோனே, தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே" எனப் போற்றப்படுபவர் யார்?
(1) முருகன் (2) சிவபெருமான் (3) விநாயகர் (4) திருமால்

**2.** ஐந்தொழில்களில் 'திரோபவம்' என்பது
(1) படைத்தல் (2) காத்தல் (3) அழித்தல் (4) மறைத்தல்

**3.** திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட நெறி
(1) சைவம் (2) சாக்தம் (3) வைணவம் (4) காணாபத்தியம்

**4.** 'தண்ணளி வெண்குடை வேந்தன்' எனப் பெரிய புராணத்தில் போற்றப்படும் மன்னன்
(1) நின்றசீர் நெடுமாறன் (2) மனுநீதி கண்ட சோழன்
(3) சேரமான் பெருமாள் (4) அநபாய சோழன்

**5.** ஆகம முறையில் வழிபடப்படும்போது வைரவர் எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?
(1) சுடலை வைரவர் (2) காட்டு வைரவர்
(3) இரத்த வைரவர் (4) ஞான வைரவர்

**6.** "மாலற நேயம் மலிந்தவர் வேடமும்" என்னும் பாடலடியில் போற்றப்படுபவர்கள்
(1) சிவனடியார்கள் (2) தேவர்கள் (3) அரசர்கள் (4) அரக்கர்கள்

**7.** சுவாமி விபுலானந்தர் ஆசிரியராகப் பணிபுரிந்த தமிழ்மொழி மூலச் சஞ்சிகை
(1) யாழ் நூல் (2) வேதாந்த கேசரி
(3) மதங்க சூளாமணி (4) இராமகிருஷ்ண விஜயம்

**8.** திருவாதிரையன்று இடம்பெறும் 'நடேசர் அபிஷேக தரிசனம்' எவ்வாறு அழைக்கப்படும்?
(1) ஆருத்ரா தரிசனம் (2) சிவலிங்க தரிசனம்
(3) விநாயகர் தரிசனம் (4) திருக்கைலாய தரிசனம்

**9.** "படமாடக் கோயில்..." எனத் தொடங்கும் பாடலில் மக்களுக்குச் செய்யும் சேவை இறைவனால் விரும்பி ஏற்கப்படுகின்றது எனக் கூறுவது
(1) திருவிசைப்பா (2) திருமந்திரம் (3) திருவாசகம் (4) தேவாரம்

[பக். 2 ஐப் பார்க்க

10. "அரிது அரிது மானிடராதல் அரிது" எனக் கூறியவர்
(1) திருவள்ளுவர் (2) ஔவையார் (3) திருமூலர் (4) பாரதியார்

11. தனது மனைவியின் தாலியை விற்று இறைவனுக்கு தூபமிடும் தொண்டினைச் செய்தவர்
(1) அப்பூதியடிகள் (2) சிறுத்தொண்டர்
(3) குங்கிலியக்கலயர் (4) இளையான்குடிமாற நாயனார்

12. சைவம் வலியுறுத்தும் நான்கு வாழ்க்கைப் படிநிலைகளில் ஏனைய நிலையில் உள்ளவர்களுக்கும் துணையாக அமையும் படிநிலை
(1) பிரமச்சரியம் (2) இல்லறம் (3) வானப்பிரஸ்தம் (4) துறவறம்

13. சோழராட்சிக் காலத்தில் இலங்கையில் அமைக்கப்பட்ட 2ஆம் சிவாலயம் வேறு எப்பெயரினால் அழைக்கப்படுகின்றது?
(1) வானவன் மாதேவி ஈச்சரம் (2) ஜனநாதமங்கலம்
(3) உத்தம சோழேசுவரம் (4) விஜயராஜ ஈச்சரம்

14. சின்னக்கதிர்காமம் என்றழைக்கப்படும் ஈழத்து ஆலயம்
(1) இணுவில் கந்தசுவாமி ஆலயம் (2) மண்டூர் கந்தசுவாமி கோயில்
(3) நல்லூர் கந்தசுவாமி கோயில் (4) வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயம்

15. சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தால் யாழ்ப்பாணத்தில் சைவாசிரிய கலாசாலை நிறுவப்பட்ட இடம்
(1) திருநெல்வேலி (2) சுன்னாகம் (3) உரும்பிராய் (4) கோப்பாய்

16. நாலாயிர திவ்வியபிரபந்த ஆசிரியர்களில் இருவர்
(1) தொண்டரடிப் பொடியாழ்வார், சேதிராயர்
(2) நம்மாழ்வார், புனிதவதியார்
(3) தொண்டரடிப் பொடியாழ்வார், நம்மாழ்வார்
(4) புனிதவதியார், சேதிராயர்

17. "நெக்குள் ஆர்வம் மிகப்பெருகி..." என சம்பந்தப்பெருமான் பாடிய தேவாரத்தில் சிறப்பிக்கப்படும் சிவசின்னங்களாவன
(1) விபூதி, உருத்திராக்கம் (2) உருத்திராக்கம், பஞ்சாட்சரம்
(3) விபூதி, பஞ்சாட்சரம் (4) விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம்

18. சிவலிங்க மூர்த்தத்தில் பீடம், இலிங்கம் என்பன குறித்து நிற்பன முறையே
(1) விஷ்ணு, சிவன் (2) சிவன், பிரம்மன்
(3) சக்தி, விஷ்ணு (4) சக்தி, சிவன்

19. சைவசித்தாந்தம் உள்பொருட்களாகக் கொள்வனவற்றுள் 'பாசம்' என்பது
(1) அறிவித்தால் அறியும் பொருள் (2) அறிவிக்காமலே அறியும் பொருள்
(3) அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் (4) அறிவே வடிவான பொருள்

20. திருநாவுக்கரசர் சூல, இடப இலச்சினைகளை தனது தோளில் பொறிக்க இறைவனிடம் வேண்டிப் பாடிய பதிகம்
(1) "திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்..." (2) "பண்ணினேர் மொழியாள் உமை பங்கரோ..."
(3) "ஒன்று கொலாம் அவர் சிந்தை..." (4) "மாதரப் பிறைக் கண்ணியானை..."

21. திருமுறை என்பதன் பொருளாக அமைவது
(1) இது முன்பு இவ்வாறு நிகழ்ந்தது
(2) தொன்று தொட்டு வரும் அறிவு
(3) மனிதர்களால் உருவாக்கப்படாதது
(4) தெய்வத்தன்மை பொருந்திய அருட்பாக்களின் தொகுப்பு

22. இந்துக்கள் நிகழ்த்தும் 'வித்தியாரம்பம்' என்பது
(1) நித்திய கிரியைகளில் ஒன்றாகும். (2) அபரக் கிரியைகளில் ஒன்றாகும்.
(3) பூர்வக் கிரியைகளில் ஒன்றாகும். (4) சிரார்த்தக் கிரியைகளில் ஒன்றாகும்.

[பக். 3 ஐப் பார்க்க

**23.** இறைவனின் தடத்தநிலை என்பது
(1) மனம், வாக்கு, காயங்களுக்கு எட்டாத நிலை
(2) ஆன்மாக்களுக்கு அருள்புரிய வந்த நிலை
(3) குணம், குறிகளுக்கு அப்பாற்பட்ட நிலை
(4) விருப்பு, வெறுப்புகளைக் கடந்த நிலை

**24.** இந்துசமயம் 'சனாதன தர்மம்' என அழைக்கப்படக் காரணமாக அமைவது
(1) அறுவகைச் சமய நெறிகளைக் கொண்டதனாலாகும்.
(2) வேதத்தினைப் பொது நூலாகக் கொண்டதனாலாகும்.
(3) அநாதி காலம் தொட்டு நிலைபெற்றிருப்பதனாலாகும்.
(4) ஆலய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பதனாலாகும்.

**25.** திருநீறானது 'ஷாரம்' எனப் பெயர் பெறக் காரணமாக அமைவது
(1) பாவங்களை எரித்து நீறாக்குவதனாலாகும்.
(2) உயிர்களது மும்மலங்களையும் நீக்குவதனாலாகும்.
(3) மேலான செல்வத்தைத் தருவதனாலாகும்.
(4) தன்னைத் தரித்த ஆன்மாக்களை இரட்சிப்பதனாலாகும்.

**26.** திருமணக் கிரியைகளை மட்டும் கொண்ட தொகுதி
(1) மங்கல நீராட்டுதல், அஸ்திசஞ்சயனம், அந்தியேட்டி
(2) அக்கினி வலம் வருதல், அம்மி மிதித்தல், மங்கல நாண் பூட்டுதல்
(3) வீட்டுக்கிருத்தியம், நாமகரணம், சபிண்டீகரணம்
(4) அம்மி மிதித்தல், சபிண்டீகரணம், மங்கல நாண் பூட்டுதல்

**27.** வரதபண்டிதரால் எழுதப்பட்ட நூல்களை மட்டும் கொண்ட தொகுதி
(1) தட்சிண கைலாச புராணம், பிள்ளையார் கதை, ஏகாதசி புராணம்
(2) பறாளைவிநாயகர் பள்ளு, ஏகாதசி புராணம், சிவராத்திரி புராணம்
(3) ஏகாதசி புராணம், கல்வளையந்தாதி, பிள்ளையார் கதை
(4) சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம், பிள்ளையார் கதை

**28.** அபரக் கிரியைகள் நிகழ்த்தப்படுவதன் பிரதான நோக்கமாக அமைவது
(1) இறந்தவர்களின் உறவினர்களின் வாழ்வு மேம்படுவதற்காகும்.
(2) பிதிரர்கள் நற்கதி அடைய வேண்டும் என்பதற்காகும்.
(3) இறந்தவர்கள் மீண்டும் பிறக்க வேண்டும் என்பதற்காகும்.
(4) சுற்றுச் சூழலுக்குத் தீங்கு வராமலிருப்பதற்காகும்.

**29.** பிரதிஷ்டையின் வகைப்பாடுகளுள் 'அந்தரிதம்' என்பது
(1) ஆலயங்கள் இல்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்துச் செய்யப்படுவதாகும்.
(2) அழிந்த ஆலயம் இருந்த இடத்தில் ஆலயம் அமைத்துச் செய்யப்படுவதாகும்.
(3) ஆலயம் சேதமடையும்போது பாலஸ்தாபனம் செய்து நிகழ்த்தப்படும் கிரியையாகும்.
(4) தீட்டுக்குரிய சம்பவங்கள் ஆலயத்தில் இடம்பெறின் செய்யப்படும் பிராயச்சித்த வழிபாடாகும்.

**30.** சாமீபமுக்தி என்பது
(1) சிவனது உருவத்தைப் பெறுதலைக் குறிக்கின்றது.
(2) சிவனுடைய உலகத்தில் இருத்தலாகும்.
(3) சிவனோடு அருகிலிருக்கும் நிலையாகும்.
(4) சிவத்துடன் அத்துவிதமாகக் கலந்து நிற்றலாகும்.

**31.** பகவத்கீதை, தம்மபதம் ஆகிய இரு நூல்களினதும் பொதுப் பண்பாக அமைவது
(1) இவ்விரு நூல்களும் யுத்த களத்தில் வைத்து உபதேசிக்கப்பட்டவை.
(2) இவை இரண்டிற்கும் சங்கரர் உரை எழுதியுள்ளார்.
(3) பாளி மொழியில் இவ்விரு நூல்களும் எழுதப்பட்டுள்ளன.
(4) இவ்விரண்டும் மானிட விடுதலைக்கு அறத்தை முதன்மைப்படுத்துகின்றன.

[பக். 4 ஐப் பார்க்க

**32.** சித்திரா பௌர்ணமி விரதமானது
(1) இறந்த தாயை நினைத்து அனுஷ்டிக்கப்படுகிறது.
(2) இறந்த தந்தைக்காக நோற்கப்படுகிறது.
(3) மரணித்த புத்திரனுக்காக நோற்கப்படுகிறது.
(4) இறந்த துணைக்காக அனுஷ்டிக்கப்படுகிறது.

**33.** சிவபெருமானின் திருமுகங்கள் மட்டும் அடங்கிய தொகுதி
(1) சத்தியோஜாதம், பரம், வாமதேவம், விபவம் (2) வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம்
(3) பரம், வியூகம், அகோரம், ஈசானம் (4) அகோரம், வாமதேவம், விபவம், ஈசானம்

**34.** சைவ நாற்பாதங்களுள் சரியாபாதமானது
(1) தொண்டுகள், சமயாசாரங்கள் பற்றி விளக்குகின்றது.
(2) மந்திர உச்சாடனம், பூசை, செபம் பற்றி உரைக்கின்றது.
(3) அஷ்டாங்க சிவயோகத்தை விபரிக்கின்றது.
(4) முப்பொருள் உண்மையினைக் கூறுகின்றது.

**35.** ஸ்பரிச தீட்சை என்பது குருவானவர் சீடனை அருள் உணர்வோடு
(1) விழிகளால் நோக்குதலாகும். (2) கரங்களால் தீண்டுதலாகும்.
(3) வாக்கினால் உபதேசித்தலாகும். (4) மனதினால் தூண்டுதலாகும்.

**36.** பகவத்கீதையின் மூன்று யோகங்களும் உள்ளடங்கிய தொகுதி
(1) கர்ம யோகம், சிவயோகம், பக்தி யோகம்
(2) சிவயோகம், பக்தி யோகம், ஞான யோகம்
(3) ஞான யோகம், கர்ம யோகம், சிவயோகம்
(4) கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம்

**37.** தாவரலிங்கம் என்பது
(1) யாவரும் வழிபடுவதற்காகத் திருக்கோயில்களில் நிலையாகத் தாபிக்கப்படுவதாகும்.
(2) தனிப்பட்டவரின் விருப்பிற்கேற்ப குருவின் உபதேசப்படி பூசிக்கும் இலிங்கமாகும்.
(3) ஆற்றிலேனும், குளத்திலேனும் விடப்படுவதற்காகச் செய்யப்படுவதாகும்.
(4) மண், அரிசி, அன்னம் போன்றவற்றால் செய்யப்படுவதாகும்.

- மேல்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு **38** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைத் தெரிவுசெய்க.

| தெய்வம் | நூல் | வழிபாடு |
|---|---|---|
| A - கண்ணகி | D - மகாபாரதம் | G - ஐப்பசிப் பரணி |
| B - திரௌபதை | E - கிராமியச் சடங்குப் பாடல் | H - தருமர் பட்டாபிஷேகம் |
| C - சேத்திரபாலகர் | F - சிலப்பதிகாரம் | I - குளுர்த்திச் சடங்கு |

**38.** பாஞ்சால மன்னன் புரிந்த யாகத்திலிருந்து தோன்றிய பெண்ணோடு தொடர்புடைய தொகுதி
(1) AEH (2) AGI (3) BCI (4) BDH

**39.** பௌத்தர்கள் 'பத்தினி தெய்யோ' என அழைக்கும் தெய்வத்தோடு தொடர்புடைய தொகுதி
(1) ADH (2) AFI (3) BEI (4) CGH

**40.** வைரவர் வழிபாட்டோடு தொடர்புடைய தொகுதி
(1) ADE (2) BEI (3) BFI (4) CEG

* *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

12 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

ශෛවනෙරි **I, II**
சைவநெறி **I, II**
Saivanery **I, II**

## சைவநெறி II

※ முதலாம், **இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) முருகப்பெருமானுக்குரிய விரதங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) சித்தாந்த அட்டகத்தினுள் அடங்கும் நூல்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iii) வடமோடி, தென்மோடிக் கூத்துகளில் செல்வாக்குப் பெறும் இந்து இலக்கியங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iv) திலகவதியார் சைவ சமயத்தில் கொண்டிருந்த பற்றுறுதி எங்ஙனம் வெளிப்படுத்தப்படுகிறது?

(v) குங்கிலியக்கலய நாயனார் தமது இல்லத்திற்கு அழைத்து உபசாரம் செய்த சமயகுரவர்கள் **இருவரைக்** குறிப்பிடுக.

(vi) குடமுழுக்கானது 'பெருஞ்சாந்தி' என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

(vii) இந்துக்களின் காலக் கணிப்பீட்டு முறைகளில் சந்திரமானம் என்பது யாது?

(viii) சைவசமயிகள் பேணவேண்டிய அகஆசாரங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ix) திருக்கோயில்களில் இடம்பெறும் திருவிழாக்களால் விளையும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(x) "யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே" எனும் திருமந்திரப் பாடலடியில் வெளிப்படும் நற்செயல் யாது?

**2.** (i) மேல்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(அ) "அங்கமும் வேதமும் ஓது நாவர்........"

(ஆ) "தந்தது உன்தன்னை கொண்டது........"

(இ) "பச்சைமா மலைபோல் மேனி........."

(ஈ) "பாலுக்குப் பாலகன் வேண்டி........"

(உ) "ஆத்தாளை எங்கள் அபிராம........"

(ii) மேலே (i) இல் எழுதிய பாடல்களின் பொழிப்புரையை எழுதுக.

**3.** "மாதர் மடப் பிடியும் மட அன்னமும் அன்னதோர்..."

- திருஞானசம்பந்தர்

(i) திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட ஈழநாட்டுத் திருத்தலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) திருஞானசம்பந்தரின் காலத்தில் இறை பணியாற்றிய நாயன்மார்கள் **மூவரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(iii) திருஞானசம்பந்தரால் 'யாழ்முரிப் பதிகம்' பாடப்பட்ட சந்தர்ப்பத்தினைச் சுருக்கமாக விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

**4.** "ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி"

- இருக்கு வேதம்

(i) வேதங்கள் 'எழுதாமறை' என அழைக்கப்படக் காரணம் யாது?

(ii) இருக்கு வேதம் போற்றும் தெய்வங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(iii) வேதத்தின் **மூன்று** காண்டங்களையும் சுருக்கமாக விளக்குக.

**5.** "பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமாம்
மெய்யிரண்டுங் காணார் மிக" - திருவருட்பயன்

(i) ஆன்மாக்களின் இலட்சியம் யாது?

(ii) மும்மலங்களும் எவை?

(iii) பிராரத்த வினை, ஆகாமிய வினை, சஞ்சித வினை என்பன பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**6.** "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

- மணிமேகலை

(i) பதிபுண்ணியம் என்றால் என்ன?

(ii) சிவனடியார்களுக்கு உணவளிக்கும் தொண்டினைச் செய்த நாயன்மார்கள் **மூவரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(iii) ஆறுமுகநாவலரின் 'கஞ்சித் தொட்டி தருமம்' பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**7.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்

(ii) சைவபரிபாலன சபையின் கல்விப் பணிகள்

(iii) சைவ விழுமியங்களில் வாய்மை

(iv) வரலட்சுமி விரதம்

❊ ❊ ❊

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**12 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

| | |
|---|---|
| ශෛවනෙරි | **I, II** |
| சைவநெறி | **I, II** |
| Saivanery | **I, II** |

## சைவநெறி II

- ※ முதலாம், **இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) முருகப்பெருமானுக்குரிய விரதங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) சித்தாந்த அட்டகத்தினுள் அடங்கும் நூல்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iii) வடமோடி, தென்மோடிக் கூத்துகளில் செல்வாக்குப் பெறும் இந்து இலக்கியங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iv) திலகவதியார் சைவ சமயத்தில் கொண்டிருந்த பற்றுறுதி எங்ஙனம் வெளிப்படுத்தப்படுகிறது?

(v) குங்கிலியக்கலய நாயனார் தமது இல்லத்திற்கு அழைத்து உபசாரம் செய்த சமயகுரவர்கள் **இருவரைக்** குறிப்பிடுக.

(vi) குடமுழுக்கானது 'பெருஞ்சாந்தி' என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

(vii) இந்துக்களின் காலக் கணிப்பீட்டு முறைகளில் சந்திரமானம் என்பது யாது?

(viii) சைவசமயிகள் பேணவேண்டிய அகஆசாரங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ix) திருக்கோயில்களில் இடம்பெறும் திருவிழாக்களால் விளையும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(x) "யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே" எனும் திருமந்திரப் பாடலடியில் வெளிப்படும் நற்செயல் யாது?

**2.** (i) மேல்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(அ) "அங்கமும் வேதமும் ஓது நாவர்........"

(ஆ) "தந்தது உன்தன்னை கொண்டது........"

(இ) "பச்சைமா மலைபோல் மேனி........."

(ஈ) "பாலுக்குப் பாலகன் வேண்டி........"

(உ) "ஆத்தாளை எங்கள் அபிராம........"

(ii) மேலே (i) இல் எழுதிய பாடல்களின் பொழிப்புரையை எழுதுக.

**3.** "மாதர் மடப் பிடியும் மட அன்னமும் அன்னதோர்..."

- திருஞானசம்பந்தர்

(i) திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட ஈழநாட்டுத் திருத்தலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) திருஞானசம்பந்தரின் காலத்தில் இறை பணியாற்றிய நாயன்மார்கள் **மூவரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(iii) திருஞானசம்பந்தரால் 'யாழ்முரிப் பதிகம்' பாடப்பட்ட சந்தர்ப்பத்தினைச் சுருக்கமாக விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

**4.** "ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி"

- இருக்கு வேதம்

(i) வேதங்கள் 'எழுதாமறை' என அழைக்கப்படக் காரணம் யாது?

(ii) இருக்கு வேதம் போற்றும் தெய்வங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(iii) வேதத்தின் **மூன்று** காண்டங்களையும் சுருக்கமாக விளக்குக.

**5.** "பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமாம்

மெய்யிரண்டுங் காணார் மிக" - திருவருட்பயன்

(i) ஆன்மாக்களின் இலட்சியம் யாது?

(ii) மும்மலங்களும் எவை?

(iii) பிரார்த்த வினை, ஆகாமிய வினை, சஞ்சித வினை என்பன பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**6.** "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

- மணிமேகலை

(i) பதிபுண்ணியம் என்றால் என்ன?

(ii) சிவனடியார்களுக்கு உணவளிக்கும் தொண்டினைச் செய்த நாயன்மார்கள் **மூவரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(iii) ஆறுமுகநாவலரின் 'கஞ்சித் தொட்டி தருமம்' பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**7.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்

(ii) சைவபரிபாலன சபையின் கல்விப் பணிகள்

(iii) சைவ விழுமியங்களில் வாய்மை

(iv) வரலட்சுமி விரதம்

❋❋❋